2020-ம் வருடம் நவம்பர் மாதம் 16-ம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சியில் 201516-ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (NUHM) திட்டத்தின் கீழ், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு 21.10.2020ல் இரு உறை முறையில் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆராய்ந்து தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப்புள்ளிகளை (PRICE BID) 02.11.2020-ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆம்பூர் நகரம் கஸ்பா.பி பகுதி ஆதிதிராவிடர் குடியிருப்பு பொதுஇடம் வார்டு.சி, பிளாக்.24, நகரளவு எண்கள்.151,152 (ம) 4Pt- இடத்தில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் | 48.00 | 1.கே.பாபு<br><br>2.எம்.சங்கர் | 4.72% மதிப்பீட்டை விட அதிகம்<br><br>4.90% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் கே.பாபு அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.514/2015/இ1, நாள்: 03.11.2020 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், வேலையினை செய்யும் பணியாட்களின் கூலித் தொகை அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து வழங்க இயலாதநிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் தனது 06.11.2020ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. 2015-16-ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (NUHM) திட்டத்தின் கீழ், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணியினை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ளவாறு, மதிப்பீட்டிற்கு 5 சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில்

கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு கே.எஸ்.என்.கன்ஸ்டிக்சன்ஸ் ஒப்பந்தாரர் மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம்.
ஆ. மேற்படி திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.514/2015/இ1
தீர்மான எண்.113:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**2.** ஆம்பூர் நகராட்சி **2018–ம்** ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்ற சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்திடமிருந்து பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுகழிப்பறைகள் கட்டுதல் பணிகள் மேற்கொண்டு முழுமை அடைந்த நிலையில் தற்போது திறந்த வெளி கழிப்பிடங்களற்ற நகராட்சியாக அறிவிக்க (ODF+)க்கு **29.10.2020** அன்று மன்றத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் ஆட்சேபனைக்களுக்காக **30.10.2020** அன்று செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது. தற்போது எந்த வித ஆட்சேபனையும் பொதுமக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் ODF+ விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர்.சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: **984**/எச்**1/2017**
தீர்மான எண்.114:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3.இந் நகராட்சியில் 2015-16-ஆம் ஆண்டு தேசிய நகர்புற சுகாதார இயக்க திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்படவுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணத்தொகை ரூ.4,082/-ஐ (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்திரெண்டாயிரம் மட்டும்) சென்னை, பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண். 514/2015/இ1
தீர்மான எண்.115:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மேல்நிலை நீர்தேக்க மூலம் குடிநீர் விநியோகம் மேற்கெள்ளும் போது குடிநீர் பகிர்மான குழாய்களில் அழுத்தம் காரணமாக வெடிப்புகள் ஏற்பட்டு குடிநீர் விநியோக பாதிக்கப்படுகின்றது. மேற்படி, பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ 5.00 இலட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று 06.11.2020-ஆம் தேதியன்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஒப்பந்ததாரர் பெயர்**<br>**திரு/திருமதி** | **ஒப்பந்தப்புள்ளி**<br>**சதவீதம்** |
|---|---|
| 1.எஸ். அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு.<br><br>1.50% மதிப்பீட்டைவிட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கிகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
2. குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், குறைவான ஒப்பந்தபுள்ளி வழ்கியுள்ள எஸ். அருணாசலம் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 1418/2020/இ2**

தீர்மான எண்.116:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5 . இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு Rail Internet Connection தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு இணைப்பினை Renewal செய்யவும், இரண்டு மோடம் வாங்கிகொள்ளவம் ஆகும் செலவினத் தொகை ரூ17,420/-ஐ ஸ்ரீ பாலாஜி நெட் ஒர்க் இன்ஸ்டலேஷன் ஆம்பூர் என்பவருக்கு வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும், தொகை வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.1352/இ2/2020**

தீர்மான எண்.117:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு செய்தல் பணிக்கும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கும் தீர்மான எண் 33 நாள்: 18.03.2020-இல் அங்கீகாரம் பெற்று 03.11.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி<br>சதவீதம் |
|---|---|
| 1.எஸ். அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு.<br><br>1.20% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு. எஸ். அருணாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2.தெருவிளக்கு பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 760/2020/இ2**

தீர்மான எண்.118:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. தமிழக அரசின் மூன்றாண்டு சாதனையை முன்னிட்டு ஆம்பூர் நகராட்சியில் கடந்த மூன்றாண்டுகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விவரத்தை கீழ்குறிப்பிட்டுள்ள நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணத் தொகையை கீழ் கண்டுள்ள விவரப்படி அந்தந்த நாளிதழ்களுக்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பரக்கட்டணத்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினதந்தி | 23,940/- |
| 2 | தினமணி | 25,200/- |
| 3 | தினமலர் | 23,940/- |
| 4 | தினகரன் | 24,780/- |
| 5 | மாலைமலர் | 10,900/- |
| 6 | மாலை தமிழகம் | 14,700/- |

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.மேற்படி விளம்பரக்கட்டணத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.974/2020/இ1

தீர்மான எண்.119:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**8.** ஆம்பூர் நகராட்சி, தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக ஆம்பூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் (Secondary Storage) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் (Transportation) செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஆம்பூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three

Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழ் (Self Declaration) அனுமதித்து மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சம்பந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.984/எச்1/2015

தீர்மான எண்.120:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி